## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.85/2018

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஈஸ்வரி (எ) தேவி | மதம் | : இந்து |
| க/பெ | : கருணாகரன் | ஜாதி | : -- |
| வயது | : 54 | கிராமம் | : காவனூர் |
| தொழில் | : கூலி | வட்டம் | : அரக்கோணம் |

**04.02.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

10. ஆதியில் தாவா சொத்து தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாவுக்கு பாத்தியம் என்றால் ஆமாம். தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யா எனக்கு என்ன உறவு என்றால் தாத்தா ஆவார். தோட்டி சாமைய்யா என்ற வடக்கைய்யாக்கு எத்தனை வாரிசுகள் என்றால் பொன்னன், கொள்ளாபுரி, சித்திரை, அரசன் ஆகிய நால்வர் ஆவார்கள். என் அப்பா பெயர் என்ன என்றால் அரசன் ஆகும். 1991ல் சித்திரையின் வாரிசான துரை மற்றும் ரவி வாதிக்கு கிரையம் எழுதி கொடுக்கும்போது என் அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் 1991ல் என் அப்பா உயிருடன் இருந்தார். ஆனால் கிரைய விவரம் எங்களுக்கு தெரியாது.

11. 1991ல் துரை மற்றும் ரவி வாதிக்கு கிரையம் எழுதி கொடுத்த விவரம் என் அப்பாவிற்கு தெரியும் என்றால் என் அப்பாவுக்கு தெரியாது. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1986ல் திருமணம் ஆனது. துரை மற்றும் ரவி வாதிக்கு கிரையம் எழுதிகொடுத்த விவரம் என் அப்பாவிற்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. துரை மற்றும் ரவி வாதிக்கு கிரையம் எழுதிகொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா சொல்லித்தான் எனக்கு தெரியும். என் அப்பாவிற்கே துரை மற்றும் ரவி வாதிக்கு கிரையம் எழுதிகொடுத்த விவரம் தெரியாத நிலையில் என் அப்பா சொல்லி எனக்கு தெரியும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் 1989ல் என் அப்பா வழக்கு

தாக்கல் செய்திருந்தார். 1991ல் அவர்கள் பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். மீண்டும் எங்கள் மீது வழக்கு போடும்போதுதான் எங்களுக்கு அந்த விவரம் தெரியும்.

12. என்ன வழக்கு அவர்கள் தாக்கல் செய்தார்கள் என்றால் சொத்து அவர்களுடையது என வழக்கு தாக்கல் செய்தார்கள். எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் இந்த நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்தார்கள். வழக்கு எண் எனக்கு ஞாபகமில்லை. எங்கள் மீது யார் யார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் கொள்ளாபுரி மற்றும் பெரியப்பன் ஆவார்கள். யார் யார் மீது அந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் என் கணவர் மீது வழக்கு தாக்கல் செய்தார்கள். 1991ல் நான் என் அப்பா வீட்டில் இருந்து திருமணம் ஆகி என் கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டதால் எனக்கு இந்த கிரைய விவரங்கள் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. சித்திரை வாரிசுகளின் பங்கு 19 செண்ட்டில் ஆறேகால் செண்ட் வாதிகளும் ஆறுமுகத்திற்கு கிரையம் கொடுத்த ஆறேகால் செண்ட் போக மீதி இடத்தை துரை வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1970ல் பிறந்தேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 1945 முன்பிலிருந்தே என் அப்பா அனுபவித்து வந்ததாக சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அப்பா சொல்லி தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள பட்டா பாஸ்புக் பற்றி நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 1950ல் திருமணத்திற்காக வழக்கு சொத்தை அடமானம் வைத்ததாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

14. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 2 அடமான ஆவணத்தில் புல எண்.138/6 இல்லை என்றாலும் புல எண்.138/4 தான் உள்ளது என்றாலும் ஆனால் அது கிணறு எல்லாம் காட்டப்பட்டுள்ளது. அது வழக்கு சொத்துதான். 1974ல் இருந்து என் அப்பாதான் அனுபவித்து வருகிறார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1984ல் UDR பட்டா கொடுத்ததாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதில் அந்த UDR பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால்தாக்கல் செய்துள்ளேன். நான் கணினி

பட்டாக்களை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நிலஉடமை மேம்பாட்டு (UDR) பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தில் வேலிக்காத்தான் மரங்களை வெட்டி விற்பதாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

15. உண்மையில் நான் மரத்தை வெட்டி அனுபவித்து வந்திருந்தால் அதை எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றாலும் உண்மையில் வாதிகள்தான் அந்த இடத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 1961 ல் இருந்து 2000 வரை வரி கட்டியதாக நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 11 முதல் பி.வா.சா.ஆ 17 வரை ஆவணங்களை யார் தமிழாக்கம் செய்தது என்றால் பதிவு அலுவலகத்தின் அருகில் உள்ள ஒருவரிடம் சென்று மொழிமாற்றம் செய்து வந்தோம்.

16. அவ்வாறு தமிழாக்கம் செய்யப்பட்டிருந்தால் பொதுவாக பெயர், கையெழுத்து இருக்கும் என்றாலும் நான் முறையாக தமிழாக்கம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா இதே நீதிமன்றத்தில் ஆதீமுலம், துரை, ஜெயபால் மீது தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.616/1989 வழக்கில் என்ன பரிகாரம் கோரியிருந்தார் என்பது தெரியுமா என்றால் அவர்கள் வந்து நிலம் அவர்களுடையது என பிரச்சனை செய்ததால் என் அப்பா வழக்கு தாக்கல் செய்தார். அ.வ.எண்.616/1989 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டார் என்றால் சொத்து எங்களுடையது என பரிகாரம் கேட்டிருந்தார். ஆதிமூலம் அவரது பங்கு 19 செண்ட்டை குப்பனுக்கு கிரையம் கொடுத்திருந்ததில் என் அப்பா அ.வ.எண்.616/1989 வழக்கை ஆதிமூலம், துரை, ஜெயபால் மீது தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல.

17. அ.வ.எண்.616/1989 வழக்கில் ஜெயபால் கிரையம் வாங்கவும் இல்லை துரை மற்றும் அவரது மகன் ரவி சொத்தை யாருக்கும் விற்கவும் இல்லை என்றாலும் அதனால்தான் அவர்கள் அந்த வழக்கை எதிர்நடத்தவில்லை என்றாலும் அது என் அப்பா சொத்து. என் அப்பா சொத்தை அவர்கள் எப்படி விற்க முடியும். துரையும் அவரது மகன் ரவியும் வழக்கு சொத்தை விற்றதாக நான் சொல்கிறேனா என்றால் என் தாத்தா என் அப்பா இருக்கும்போதே சொத்தை அவரவர்களாக விற்றிருந்தார்கள். என்

அப்பா தாக்கல் செய்த வழக்கில் புல எண்.138/6 ல் 23 செண்ட்க்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் 57 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் 57 செண்ட்க்குதான் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

18. புல எண்.138/6 ல் உள்ள 57 செண்டில் என் அப்பாவிற்கு 19 செண்ட்தான் பாத்தியம் என்றாலும் என் அப்பா தேவையற்று கூடுதல் விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் என் அப்பாவிற்கு 57 செண்ட்தான் பாத்தியம். 57 செண்ட்க்குதான் வழக்கு தாக்கல் செய்திருந்தார். என் அப்பா 57 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் 23 செண்ட்க்கு மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் 57 செண்ட்க்குதான் வழக்கு தாக்கல் செய்திருந்தார். 57 செண்ட் என் அப்பாவிற்கு மட்டும் இல்லை என்றாலும் அதில் 3 பேருக்கு பங்கு உள்ளது என்றாலும் இது தெரியாமல் என் அப்பா 23 செண்ட்க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 57 செண்ட்டுமே என் அப்பாவிற்குதான் பாத்தியம்.

19. என் அப்பாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் 4 பேர்களில் ஒருவர் இறந்துவிட்டதால் 3 பேருக்குதான் சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல நான்கு பேருக்கும் பாகம் உள்ளது. 57 செண்ட்டில் 3 பேருக்கும் பங்கு உள்ளதில் கூடுதல் விஸ்தீரணமான 23 செண்ட்க்கு என் அப்பா தாக்கல் செய்த வழக்கே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் அப்பா உடன் பிறந்த 4 பேருக்குமே வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். ஆனால் அதில் பொன்னன் என்பவர் மட்டும் திருமணம் முடிந்தவுடன் சிங்கப்பூர் சென்றுவிட்டார். அவர் அவரது இடத்திற்குரிய காசை என் அப்பாவிடம் பெற்று கொண்டு இடத்தை என் அப்பாவிற்கு கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

20. என் அப்பா தாக்கல் செய்த அ.வ.எண்.616/1989 ஐ சித்திரை மகன் துரை மீது மட்டும்தான் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சித்திரையின் மற்றொரு மகன் துரைராஜ் மீது தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் சொத்தில் பிரச்சனைக்கு வரவில்லை. அ.வ.எண்.616/1989 ல் இவ்வழக்கு வாதியான பெரியப்பன் மற்றும் சித்திரையின் மற்றொரு மகன் துரைராஜ் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த தீர்ப்பின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இந்த வழக்கின் வாதிக்கு இல்லை என்றால் தெரியவில்லை. அ.வ.எண்.616/1989 ல் இவ்வழக்கு

வாதியான பெரியப்பன் மற்றும் வாதிக்கு கிரையம் கொடுத்த சித்திரையின் மற்றொரு மகன் துரைராஜ் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த தீர்ப்பு இவ்வழக்கின் வாதியையும் துரைராஜையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி பொய்யான ஆவணங்களை தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளதில் நான் காவல் துறையிலோ பதிவாளர் அலுவலகத்திலோ புகார் கொடுத்தேனா என்றால் காவல்துறையில் புகார் கொடுத்தேன். பத்திர அலுவலகத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் அந்த புகார் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

21. நான் அவ்வாறு எந்த புகார் நகலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1991ல் என் அப்பா அம்மா இருவரும் காவேரிராஜபுரத்தில் இருந்தார்களா அல்லது என்னுடன் காவனூரில் இருந்தார்களா என்றால் ஒருநாள் இரண்டுநாள் காவேரிராஜபுரத்தில் இருப்பார்கள். மீதி நாட்கள் என்னுடன் காவனூரில் இருப்பார்கள். 1991ல் என் அப்பா அம்மா வழக்கு சொத்து இருந்த காவேரிராஜபுரத்தில்தான் இருந்தார்கள் என்றாலும் அவர்களுக்கு கிரையம் வாங்கிய விவரமும் வீடு கட்டிய விவரமும் அப்போதே தெரியும் என்றாலும் சரியல்ல. என் அப்பா அம்மா காவேரிராஜபுரத்தில்தான் இருந்தார்கள் என்றாலும் அவர்களுக்கு கிரையம் மற்றும் வீடு கட்டிய விவரம் அப்போதே தெரியும் என்றாலும் என் அப்பா வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்லும் எனக்கும் மேற்படி விவரங்கள் பற்றி தெரியும் என்றாலும் இல்லை. நாங்கள் காவனூரில்தான் இருந்தோம்.

22. கிரையம் வாங்கிய விவரமும் வீடு கட்டிய விவரமும் அப்போதே என் அப்பாவிற்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)